# TNPSC Tamil Current Affairs 2nd May 2017

1. எந்த மத்திய அமைச்சர் போர் வீரர்களை கவுரவிக்கும் விதமாக தேசிய அளவில் “Vidhya-Veerta Abhiyan” திட்டத்தை தொடங்கிவைத்தார்?

A. நரேந்திர மோடி

B. ராஜ்நாத் சிங்

C. அருண் ஜெட்லி

D. பிரகாஷ் ஜவடேகர்

**விடை : D. பிரகாஷ் ஜவடேகர்**

இத்திட்டத்தை மத்திய மனிதவளத்துறை அமைச்சரான திரு.பிரகாஷ் ஜவடேகர், May 2, 2017 அன்று தொடங்கிவைத்தார். இத்திட்டத்தின் நோக்கம், மாணவர்கள் மனதில் தேசப்பற்றை உருவாக்குவதும், போர் வீரர்களின் தேவைகளை உணர்த்துவதும் ஆகும். எனவே, “பரம் வீர் சக்ரா “ விருதுபெற்ற வீரர்களை போன்ற உருவ பொம்மைகளை, கல்லூரி வளாகங்களில் வைத்து சிறப்பித்தனர். இந்திய ராணுவத்தின் மிக உயரிய விருது “பரம் வீர் சக்ரா” ஆகும்.

winmeen

2. ஐ. நாவின் “The Economic and Social Survey of Asia and the Pacific 2017”ன் அறிக்கையின் படி, 2017ல் இந்தியாவின் GDP என்னவாக இருக்கும்?

A. 7.1 %

B. 7.5 %

C. 7.2 %

D. 7.4 %

**விடை : A. 7.1 %**

ஐ. நாவின் Economic and Social Commission for Asia and the Pacific (ESCAP), தனது 2017க்கான ஆண்டறிக்கையை May 1 2017 அன்று வெளியிட்டது. இவ்வறிக்கையின் படி, 2017ம் ஆண்டில் இந்தியாவின் GDP 7.1 % வரை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதே நிலை தொடருமானால் 2018ல் இந்தியாவின் GDP 7.5 % ஆக இருக்கும். மேலும், இதன் மூலம் சில இன்னல்களும்(அதாவது, தவறுதலான வங்கிக்கடன்கள் வழங்குவது போன்றவை) இருப்பதாக இவ்வறிக்கை எச்சரித்துள்ளது.

3. UNHCRன் புதிய “நல்லெண்ண தூதுவராக” நியமிக்கப்பட்டுள்ள Yusra Mardini, எந்த நாட்டைச்சேர்ந்தவர்?

A. கிரீசு

B. சிரியா

C. சோமாலியா

D. சாம்பியா

**விடை : B. சிரியா**

சிரியாவைச்சேர்ந்த இவர் படகில் தத்தளித்த அகதிகளுக்கு உதவினார். சிரிய அகதியும், ஒலிம்பிக் தடகள வீராங்கனையுமான இவருக்கு ஜெர்மன் நாடு புகலிடம் கொடுத்துள்ளது. தற்போது United Nations High Commissioner for Refugees(UNHCR)ன் “நல்லெண்ண தூதுவராக” நியமிக்கப்பட்டுள்ளார்.

winmeen

4. 2017 “Men’s Singles Barcelona Open Tennis” போட்டியில் வென்றவர் யார்?

A. Kei Nishikori

B. Pablo Andujar

C. Rafael Nadal

D. Dominic Thiem

**விடை : C. Rafael Nadal**

ஸ்பானிஷ் டென்னிஸ் விளையாட்டு வீரரான இவர், ஆஸ்திரிய வீரர் Dominic Thiemஐ 6-4,6-1 என்ற செட் கணக்கில் தோற்கடித்து, 2017ம் ஆண்டுக்கான “Men’s Singles Barcelona Open Tennis” போட்டியில் வென்றவர் ஆகிறார். இப்போட்டி ஸ்பெயினிலுள்ள பார்சிலோனா நகரத்தில் நடைபெற்றது. இந்த போட்டியை வென்றதன் மூலம், பத்து முறை இப்பரிசினை வென்றவர் என்ற சிறப்புத்தகுதியினை இவர் பெறுகிறார். இப்போட்டி ATP World Tourன் 500ல் ஒரு பாகமாகும்.

5. 19வது ஆசிய மகளிர் ஒற்றையருக்கான “Asian Individual Squash Championships - 2017” பட்டத்தினை வென்றவர் யார்?

A. Joshna Chinappa

B. Madeline Perry

C. Dipika Pallikal

D. Vicki Cardwell

**விடை : A. Joshna Chinappa**

சென்னை எக்ஸ்பிரஸ் அவென்யுவில் ஏப்ரல் 29 2017 அன்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் Dipika Pallikalஐ தோற்கடித்து Joshna Chinappa இப்பட்டத்தினை வென்றார். இதன் மூலம் “Asian Squash” பட்டத்தை வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையும் அடைகிறார்.

winmeen

6. இந்திய தொழிற்சாலை கூட்டமைப்பின் (Confederation of Indian Industry – CII) ன் முதல் பெண் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A. Preeti Jain

B. Shobana Kamineni

C. Nita Ambani

D. Vimala Mehta

**விடை : B. Shobana Kamineni**

2017-18ம் ஆண்டுக்கான CII-ன் தலைவராக இவர் செயல்படுவார். இவர் அப்போலோ மருத்துவமனைகளின் துணைத்தலைவராவார். இவருக்கு முன் CIIன் தலைவராக பதவி வகித்தவர் Dr Naushad Forbes. CIIன் புதிய துணைத்தலைவராக உதய் கோடக் பதவி வகிப்பார். CII ஒரு அரசு சாராத, வியாபார நோக்கற்ற, இந்திய தொழிற் நிறுவனங்களின் வளர்சிக்கு பங்காற்றும் ஒரு அமைப்பாகும்.

7. INSA இளம் விஞ்ஞானி விருது 2017 (Youth Scientist Award) க்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?

A. Prabeer Barpanda

B. Sai Siva Gorthi

C. Sanjay Pratihar

D. Chandan Saha

**விடை : C. Sanjay Pratihar**

இவர் தேஸ்பூர் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானியாக பணிபுரிந்துவருகிறார். இவரின் விவசாயம் சார்ந்த ஆய்வுக்காக இவ்விருது வழங்கப்படவுள்ளது. இவ்விருது வெண்கலப்பதக்கம், சான்றிதழ் மற்றும் ரூ.25000 பணப்பரிசை உள்ளடக்கியது. டிசம்பரில் நடைபெறும் INSAவின் ஆண்டுக்கூட்டத்தில் இவருக்கு இப்பரிசு வழங்கப்படும். இந்தியாவைச்சேர்ந்த இளம் விஞ்ஞானிகளுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

8. எந்த நகரம் உலகில் முதன்முதலில் தனக்கென சொந்த “மைக்ரோசாப்ட் எழுத்துரு” வை “Microsoft Font” கொண்டுள்ளது?

A. பாரிஸ்

B. நியூயார்க்

C. பெர்லின்

D. துபாய்

**விடை : D. துபாய்**

இந்த எழுத்துருவின் பெயர் “Dubai Font”. இது அரபி மற்றும் இலத்தின் எழுத்துக்களை எழுதும் விதம் உருவாக்கப்பட்டுள்ளது. இது “Dubai” “Dubai Medium” “Dubai Light” என மூன்று விதங்களில் மைக்ரோசாப்ட் ஆபிஸ் பயனாளிகளுக்கு கிடைக்கிறது. மே 1 2017 அன்று துபாய் அரசாங்கத்தால் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது. இந்த எழுத்துரு துபாய் நகரத்தின் சிறப்புகளை பிரதிபலிக்கும் விதமாக இருக்கும்.

9. விவசாயிகளுக்கான தானியங்கி வானிலை நிலையத்தை (Automated Weather Station – AWS) பயன்படுத்தும் முதல் இந்திய மாநிலம் எது?

A. கேரளா

B. பஞ்சாப்

winmeen

C. அசாம்

D. மகாராஷ்டிரா

**விடை : D. மகாராஷ்டிரா**

நாட்டிலேயே முதன்முதலாக நாக்பூரிலுள்ள Dongargaonல் அமைக்கப்பட்டுள்ளது.மகாராஷ்டிரா முழுவதும் மேலும் 2065 நிலையங்கள் இதேபோல அமைக்கப்படவுள்ளன. இது காற்றின் வேகம், ஈரப்பதம், மழையளவு போன்ற விவரங்களை விவசாயிகள் அறிந்துகொள்ள பேருதவியாக இருக்கும். இந்தத்தகவல்கள் அனைத்தும் “மகாதேவ் போர்டல்” ( மகாராஷ்டிர விவசாயிகள் வானிலை பிணையம்) மற்றும் Skymet செயலி மூலம் பகிரப்படும்.

10. இந்தியாவின் எந்த மாநிலத்தில் “The Lovely Professional University” அமைந்துள்ளது?

A. ஹரியானா

B. ராஜஸ்தான்

C. பஞ்சாப்

D. குஜராத்

**விடை : C. பஞ்சாப்**

மே 2 2017 அன்று பஞ்சாப் மாநிலம் பகவாராவிலுள்ள “The Lovely Professional University”ல் நடைபெற்ற 8வது பட்டமளிப்பு விழாவில், இந்தியக்குடியரசு தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி கலந்துகொண்டார். இப்பல்கலைக்கழகம் 200க்கும் மேற்பட்ட படிப்புகளை வழங்குகின்றது. 30,000கும் அதிகமான பட்டதாரிகளை வருடந்தோறும் இப்பல்கலைக்கழகம் உருவாக்குகிறது.

winmeen